Registered as News Paper  பக்கங்கள் 04  விலை ரூபா: 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02  திருவள்ளுவர் ஆண்டு 2022  ஐப்பசி 28  (14 - 11 1991)  வியாழக்கிழமை  ஓசை: 269

## யாழ். பல்கலையில் விநோதம்

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் வரலாற்றுத்துறை விரிவுரையாளர்களுக்கு நடந்த நேர்முகப் பரீட்சையின் மூலம் வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை எனத் தெரியவருகின்றது இவ் வெற்றிடங்கள் நிரப்படாமைக்கு சம்பளம் வழங்க பணம் பல்கலைக்கழகத்திடம் இல்லை எனக் காரணம் தெரிவிக்கப்பட்டதாம். நேற்று முன்தினம் வரலாற்றுத் துறைக்கு விரிவுரையாளர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் தகுதியானவர்கள் எனக் காணப்பட்டோருக்கு பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது. இந்த நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரிகள் பலரிடம் பல வினாக்கள் கேட்கப்பட்டனவாம். சில விண்ணப்பதாரிகள் சுமார் 15 நிமிடம் வரையிலும் (4 ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியாவில் மூன்று காவலரண்களை புலிகள் தாக்கி அழித்தனர்

## பல இராணுவத்தினர் பலி

(யாழ்ப்பாணம்)

நேற்று அதிகாலை வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த பட்டானிச்சி புளியங்குளம் என்னுமிடத்திலுள்ள சிறிலங்கா ராணுவத்தின் மூன்று காவலரண்களை விடுதலைப் புலி வீரர்கள் தாக்கி அழித்தனர். இந்த திடீர் தாக்குதலின்போது பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். புலிப்படையினரின் உக்கிரமான தாக்குதலுக்கு முகம் கொடுக்கமுடியாமல் சிங்கள இராணுவத்தினர் ஓட்டம் பிடித்தனர். சில ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. புலிகள் தரப்பில் சேதம் எதுவுமில்லை.

இத் தாக்குதல் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது; வவுனியா மாவட்டம் பட்டானிச்சி புளியங்குளம் பகுதியிலிருந்த சிறிலங்கா இராணுவத்தினரின் மூன்று காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் அதிகாலை 1-30 மணியளவில் திடீர் தாக்குதல் ஒன்றை நடத்தினர். பதினைந்து நிமிடம் வரையில் இத்தாக்குதல் நீடித்தது. இதில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து இராணுவத்தினர் பின் வாங்கி முகாமிற்கு ஓடினர். பின்னர் மூன்று காவலரண்களைக் கைப்பற்றிய விடுதலைப் புலிகள் அவற்றை அழித்தனர்.

இத் தாக்குதலின் போது விடுதலைப் புலிகளினால் சில ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. அவற்றின் விபரம் வருமாறு.

- ★ அல்டிமேட் எல். எம். ஜி. 01
- ★ அதற்குரிய நம் மகசின் 02
- ★ மேலதிக சுடுகுழல் 01
- ★ 5.56 ரக ரவைகள் 485
- ★ 7.62 ரக ரவைகள் 2524
- ★ ஜே ஆர். ரக கைக்குண்டு 01
- ★ தலைக்கவசங்கள் 02
- ★ சப்பாத்து சோடி 05
- ★ மிகரி பெல்ட் 05

## வரவு - செலவுதிட்ட விவாதத்திற்கு 26 நாட்கள்

வரவு செலவுத் திட்ட விவாதத்திற்கென இருபத்தியாறு தினங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் டிசம்பர் 19 ஆம் திகதி வரை விடுமுறை தவிர்ந்த நாட்களில் கூடி இந்த விவாதத்தை நடத்தும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வரவுசெலவுத் திட்ட இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் ஏழு தினங்கள் தொடரும் என்றும், இம் மாதம் 22 ஆம் திகதி இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பெரியதம்பனை மீது விமானக் குண்டுவீச்சு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள பெரியதம்பனை கிராமப் பகுதியின்மீது சிறிலங்கா விமானப்படை விமானங்கள் மூன்று கடுமையான குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தியுள்ளதாகத் தெரிய வருகிறது.

நேற்றுக்காலை ஏழு மணியளவில் நடத்தப்பட்ட இத்தாக்குதலின்போது ஏழுகுண்டுகளை வீசப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

## பரீட்சை நடத்தக்கோரி மாணவர் ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ள 90 ஆம் ஆண்டுக்குரிய க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையை இவ்வருடமே திட்டமிட்டவாறு நடத்தக்கோரி நேற்று மாணவர்கள் ஊர்வலம் செய்தனர்.

இந்த ஊர்வலத்தின் இறுதியில் தாம் கொண்டுசென்ற மகஜரை கல்வித் திணைக்களத்திலும் செயலகத்திலும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க காரியாலயத்திலும் (3 ஆம் பக்கம் பார்க்க)

## 156 நிலையங்களில் க.பொ.த.(சாதாரண)பரீட்சை

யாழ் மாவட்டத்தில் 1990 ஆம் ஆண்டு க. பொ. த சாதாரணப் பரீட்சையும், 91 ஆம் ஆண்டு க. பொ. த. சாதாரணப் பரீட்சையும் டிசம்பர் 9 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற இருப்பதாக கொழும்பு பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

90 ஆம் ஆண்டுப் பரீட்சை பழைய திட்டத்தின் படி 16 நிலையங்களிலும், புதிய பாடத்திட்டத்தின்படி 140 நிலையங்களிலும் டிசம்பர் மாதம் 9 ஆம் திகதி ஆரம்பமாகும்.

91 ஆம் ஆண்டுப் பரீட்சை (புதிய பாடத்திட்டம் மாத்திரம்) 144 பரீட்சை நிலையங்களில் நடைபெறும்

சமூகக்கல்விப்பாடம் மாத்திரம் 90ஆம் ஆண்டுக்கும் (4 ஆம் பக்கம் பார்க்க)

### தனியார் வர்த்தகருக்கு

## கப்பலில் வந்த சவர்க்காரம் கூட். சங்கம் விநியோகம்

பங்கீட்டு அடிப்படையில் விநியோகிக்கப்படவிருக்கும் சவர்க்காரம் மற்றும் சலவைத்தூள் ஆகியவற்றின் விலை ... கருக்கு அனுப்பப்பட்டது என்பதைத் தொடர்ந்தே இந்த விலை மாற்றம்.

கொழும்பிலிருந்து கப்பலில்

## இந்தியா - சிறிலங்கா

வத்தினரின் மூன்று காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் அதிகாலை 1-30 மணியளவில் திடீர் தாக்குதல் ஒன்றை நடத்தினர். பதினைந்து நிமிடம் வரையில் இத்தாக்குதல் நீடித்தது. இதில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து இராணுவத்தினர் பின் வாங்கி முகா

... விடுதலைப் புலிகளினால் பல ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. அவற்றின் விபரம் வருமாறு.

★ அல்டிமேட் எல். எம். ஜி. 01
★ அதற்குரிய தம் மகசீன் 02
★ மேலதிக குடுகுழல் 01
★ 5.56 ரக ரவைகள் 485
★ 7.62 ரக ரவைகள் 2524

## இந்தியா - சிறிலங்கா

# உறவைச் சீர்செய்ய தொண்டமான் தூது

இந்திய-சிறிலங்கா உறவை விருத்தி செய்ய பேச்சுவார்த்தை நடத்த அமைச்சர் தொண்டமான் இந்தியா செல்வுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

புதுடில்லியில் இந்த மாதம் 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை நடைபெற இருக்கும் இளைஞர் உல்லாசப் பயணத்துறை சம்பந்தமான சர்வதேச மாநாட்டில் கலந்து கொள்ள புதுடில்லி செல்லும் தொண்டமான் இது குறித்து பேச்சு வார்த்தை நடத்துவார்

(3ஆம் பக்கம் பார்க்க)

# பெரியதம்பனை மீது விமானக் குண்டுவீச்சு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள பெரியதம்பனை கிராமப் பகுதியின்மீது சிறிலங்கா விமானப்படை விமானங்கள் மூன்று கடுமையான குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

நேற்றுக்காலை ஏழு மணியளவில் நடத்தப்பட்ட இத்தாக்குதலின்போது ஏழுகுண்டுகள் வரை வீசப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

# வலி. வடக்கில் இராணுவம் தொடர்ந்து துப்பாக்கி சூடு

குப்பிளான், கட்டுவன் வறுத்தலைவிளான் பகுதியில் நேற்று இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். காலையிலிருந்து மாலை வரை இடையிடையே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது

சேந்தான்குளம் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகமும், இடையிடையே எறிகணைத் தாக்குதலும் செய்தனர் புலிகள் தரப்பில் சேதம் எதுவும் இல்லை.

## அரச அதிபர் கொழும்பு பயணம்

யாழ். அரசாங்க அதிபர் திரு க. மாணிக்கவாசகர்

(4ஆம் பக்கம் பார்க்க)

90 ஆம் ஆண்டுப் பரீட்சை பழைய திட்டத்தின் படி 16 ... திரம் 90ஆம் ஆண்டுக்கும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## தனியார் வர்த்தகருக்கு

# கப்பலில் வந்த சவர்க்காரம் கூட். சங்கம் விநியோகம்

பங்கீட்டு அடிப்படையில் விநியோகிக்கப்படவிருக்கும் சவர்க்காரம் மற்றும் சலவைத்தூள் ஆகியவற்றின் விலை வில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இப்பொருட்கள் அரசாங்க அதிபருக்கு அனுப்பப்படவில்லை; தனியார் வர்த்தகருக்கு அனுப்பப்பட்டது என்பதைத் தொடர்ந்தே இந்த விலை மாற்றம்.

கொழும்பிலிருந்து கப்பலில் எடுத்துவரப்பட்ட சவர்க்கார வகைகள் யாழ். அரசாங்க அதிபருக்கு அனுப்பப்படவில்லை;

(4ஆம் பக்கம் பார்க்க)

# பத்திரிகையாளர்கள் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

பத்திரிகையாளர்கள் நேற்றுக் கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

அரசுக்குச் சொந்தமான பத்திரிகைகளை தனியார் குழுவிடம் கையளிக்க வேண்டும் என்று கோரியே இந்த ஆர்ப்

(4ஆம் பக்கம் பார்க்க)

# மாவீரர்கள் மன உறுதியே துன்பங்களை எதிர் கொண்டது

"போராட்டத்தின் ஆரம்பம் - துன்பம், துயரம், வேதனை, அவலங்கள் நிறைவாகவே இருக்கும் இதனால் போராட்டத்தில் நம்பிக்கையீனங்கள் ஏற்பட்டு பயம், பீதி, வாழவேண்டும் என்கிற ஆசைகள் மக்களை போராட்டத்துடன் இணைய விடாது தடுக்கலாம். தமிழீழப் போராட்டத்தின் ஆரம்பமும் இவ்வாறானதாகவே இருந்தது. காலப் போக்கில் இந்த இன்னல்களுக்கெல்லாம் முகம் கொடுத்து மக்கள் வாழப் பழகிக்கொண்டனர்."

இவ்வாறு தமிழீழ மாவீரர் நாள் தொடர்பாக மாவீரர் நாள் பணிமனை விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது மக்களின் மனங்களில் உறுதிநிலையும், போராட்டத்தின் மீதான நம்பிக்கையும் அதிகரித்து வருவதனை உணரக்கூடியதாக உள்ளது.

இந்த மாவீரர்கள் தங்கள் போராட்டப் பயணத்தின் போது எத்தனை துன்பங்களை, எத்தனை நெருக்கடி

(3ஆம் பக்கம் பார்க்க)

## நாளைவெளிவரும்

மாவீரர் குறிப்பேடு இன்று இணைக்கப்படவில்லை. அதே வேளை நாளைவெளி வரும்.

# ஒத்திவைப்பிற்கு யாரையும் குறை சொல்ல முடியாது

## - அப்துல் கயூம்

(லண்டன்)

கொழும்பில் ஆறாவது சார்க் உச்சி மாநாடு ஒத்திவைக்கப்பட்டமைக்கு யாரையும் குறை சொல்ல முடியாது என்று மாலைதீவு ஜனாதிபதியும், சார்க்கின் தற்போதைய தலைவருமான மஹ்மூத் அப்துல் கையூம் கூறியிருக்கிறார்.

சில உள்நாட்டுப் பிரச்சினைகள் காரணமாக பூட்டான் மன்னர் சார்க் மாநாட்டில் கலந்து கொள்ள முடியாமற் போனதால் இந்த மாநாடு நடைபெறவில்லை என்று பி.

(5ஆம் பக்கம் பார்க்க)

# தென்மராட்சி எங்கும் மாவீரர்நாள் அலங்காரம்

தென்மராட்சிப் பிரதேசம் எங்கணும் மாவீரர் வாரக் கொண்டாட்ட அலங்காரங்கள் ஆரம்பிக்கப்பட்டு துரித கெதியில் நடைபெற்றுக் கொண்டிருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது,

கைதடிச் சந்தியில் பிரமாண்டமான பந்தல் வேலை முடிவுற்ற நிலையில் உள்ளது. மிருசுவில் ஆலய முன் வீதியில் மாவீரர் வளைவு கம்பீரமாகக் காட்சி தருகிறது. கரம்பகச் சந்தியிலும் எழுதுமட்டுவாள் சந்தியிலும் வளை

(3 ஆம் பக்கம் பார்க்க)

# ஹேரத்தின் கருத்து குறித்து இந்தியா ஆச்சரியம்

ஒத்திவைக்கப்பட்ட சார்க் உச்சி மாநாடு தொடர்பாக சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் வெளியிட்ட கருத்துக் குறித்து இந்தியா ஆச்சரியம் தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் ஹரல்ட் ஹேரத் தெரிவித்த கருத்து சார்க உச்சி மாநாடு பின்போடப்பட்டதற்கான காரணத்தைச் சரியாக வெளிப்படுத்தவில்லை என்று டில்லியில் வெளியுறவுப் பேச்சாளர் ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

உச்சி மாநாட்டில் சார்க் நாடுகளின் தலைவர்கள் பங்கு

(4ஆம் பக்கம் பார்க்க)

# 5-11-91-27-11-91 வரை மாவீரர் கொடி வாரம்

## மாணவர் உணவு முத்திரை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கொத்தணியைச் சேர்ந்த அனைத்துப் பாடசாலைகளின் மாணவர்களுக்கும் மே, யூன், யூலை, ஆகஸ்ட் மாதங்களுக்கான மதிய உணவு முத்திரைகள் வழங்கப்படவிருக்கின்றது.

இம் மாதம் 17 ஆம் திகதி காலை 9·00 மணி முதல் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் வைத்து வழங்கப் படவிருப்பதாக கொத்தணி அதிபர் செ. தேவநேசன் அறிவித்துள்ளார். (ச)

புதிய உயர் கல்லூரி
New College of High Studies
ஆரியகுளம் சந்தி
யாழ்ப்பாணம்.

வெளிவாரிப்பட்டப் படிப்புக்கள்

1st in Com·

விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன

-நிர்வாகி

(B/3471)

யாழ். குடா நாட்டிலுள்ள சகல வீடியோ படப்பிடிப்பாளர்களும் நாளை (15-11-91) காலை பத்து மணிக்கு நிதர்சனம் செயலகத்தில் தங்களைப் பதிவுசெய்துகொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

பொறுப்பாளர்

நிதர்சனம்
நீப் வீதி,
திருநெல்வேலி.

(B/3476)

## தமிழ் வல்லுனர் தேவை

தமிழாக்கம் செய்யப்பட்ட விடயங்களில் இலக்கண, இலக்கிய தவறுகளைச் சரிபார்க்க வல்லுனர்கள் தேவை

தொடர்பு முகவரி:
ஈழநாதம்
31, மகேந்திரா வீதி
யாழ்ப்பாணம்.

(R/1928)

COMPUTER CLASSES

Basic dBase 111+

## 60-ம் நாள் நினைவஞ்சலி



வீரவேங்கை எட்வின்

[சின்னையா பிரபாகரன்]

| மண்ணில் | மணலாற்றில் |
|---|---|
| விளைவாய் | விதையாய் |
| 1972. 10. 11 | 1991. 09. 16 |

ஓ ... பிரியமானவனே – பிரபா!
உங்களது இழப்புக்கள் - அதனாலான
குடும்பத்தின் வெறுமைகள் - இவைதான்
உங்கள் தேச வறுமையை தீர்க்குமெனில்
பொறுமையின்றிப் பொங்கும் விழிநீருக்கு
நாமும் சிரமத்துடன் – பெரும்
அணைபோடுகின்றோம்!

'அலன் வீதி,
செம்மலை,
மணலாறு.

-குடும்பத்தினர்,
உறவினர்

(R/1922)

## 60ஆம்நாள் நினைவஞ்சலியும்

சபிண்டீகரண அழைப்பும்



## நினைவு கூருகின்றோம்...

1991 11 -14

கண்ணன்/
செல்வம்



1985 ஆம் ஆண்டு இதேதினத்தில் மன்னார் / அடம்பனை, ஆட்காட்டி வெளிப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

லெப். றொனி (யோசப் செனந்திரநாயகம் - பரப்பாங்கண்டல், மன்னார்)

உராயில் ஆற்றில் எதிர்பாராத விதமாக மூழ்கியதில் எமைப்பிரிந்த

பப்பா (மருசலின் ஜெயநேசன் - பெரியபண்டி விரிச்சான், மன்னார்)

1986 ஆம் ஆண்டு அம்பாறை, திருக்கோயில் முகாமிலிருந்து வெளியேற முற்பட்ட சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட மோதலின்போது சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய

தவம் (ஜெயரத்தினம் தவராஜா - திருக்கோயில், அம்பாறை)

குரு (சின்னத்தம்பி பத்மநாதன் - காரைதீவு, அம்பாறை)

புண்ணியன் (இருதயம் மைக்கல்கொலின் - மத்திய வீதி, மட்டக்களப்பு)

1987 ஆம் ஆண்டு வந்தாறுமூலையில் இந்தியப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய

2ஆம் லெப். சுகந்தன் (முத்தர் புஷ்பராஜா - கோரக்கல்லிமடு, கிரான், மட்டக்களப்பு)

கொழும்புத்துறையில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போது வீரச்சாவெய்திய அரியாலை பிரதேசப் பொறுப்பாளர்

அகிலன் (சந்தையா சசிகுமார் - சசிகாலை மேற்கு)

31, மகேந்திரா வீதி
யாழ்ப்பாணம்.

(R/1928)

மணலாறு. (R/1922)


# COMPUTER CLASSES

Basic dBase 111+

LOTUS 1-2-3

16th NOV. 1991 — WEEKEND BATCH
18th NOV. 1991 — WEEKDAY BATCH

குறுகிய பயிற்சி நெறி
விசேட செய்முறைப் பயிற்சி

விபரங்களுக்கு:

NORTH CEYLON TECHNICAL INSTITUTE
வட இலங்கை தொழில் நுட்ப கல்லூரி,
14, ST. PETER'S LANE,
JAFFNA. (B/3475)



புதிய உயர் கல்லூரி
NEW COLLEGE OF HIGH STUDIES
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்

வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள்
யாழ். பல்கலைக்கழகத்திற்கான

| G. A. Q. Ist In Com. |

விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.

இதற்கான
★ Drama and Theatre (நாடகமும் அரங்கியலும்)
★ Fine Arts (நுண்கலை)
★ History (வரலாறு)
★ English Literature

ஆரம்பம்: 16 - 11 - 1991

பேராதனை பல்கலைக்கழகத்திற்கான
விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன

விபரங்களுக்கு: நிர்வாகி
S. அருள்நங்கை

(B/3469)


## 60ஆம்நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

மண்ணில்
21
-
04
-
1972



மண்
மீட்பில்
16
-
09
-
1991

### வீரவேங்கை
### லெப். டொமினிக் மாஸ்டர்

(நடேசன் குமரேசன்)
(இராசவீதி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி)

16.9.1991 இல் மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்துடன் நடந்தநேரடி மோதலில் வீரமரண மடைந்த லெப்டினன்ட் டொமினிக் மாஸ்டர் அவர்களையும் அன்றைய தினம் வீரமரணமெய்திய ஏனைய வீரவேங்கைகளையும் நினைவு கூர்ந்து அவர்களின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

அத்துடன் வீரவேங்கை லெப்டினன்ட் டொமினிக் மாஸ்டரின் — நடேசன் குமரேசன் - இல்லத்தில் இன்று நடைபெறும் சபிண்டீகரண வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு இயக்க உறுப்பினர்களையும் மற்றும் அன்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-குடும்பத்தினர்

இராசவீதி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி
14-11-1991

(R/1925)

மத்திய வீதி, மட்டக்களப்பு)

1987 ஆம் ஆண்டு வந்தாறுமூலையில் இந்தியப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய

2ஆம் லெப். சுகந்தன் (முத்தர் புஷ்பராஜா - கோரக்கல்லிமடு, கிரான், மட்டக்களப்பு)

கொழும்புத்துறையில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போது வீரச்சாவெய்திய அரியாலை பிரதேசப் பொறுப்பாளர்

அகிலன் (சந்தையா சசிகுமார் - சங்கானை மேற்கு)

1988 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் தேசவிரோதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது ஆதரவாளர்கள் சங்கர், கிளியன்

1989 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போது சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திட

ஞானம் (மீனாட்சிசுந்தரம் - கிளிநொச்சி)

1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் எமது முகாமில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த

மயூரன் (சீனித்தம்பி ஜீவராஜ் - பார் வீதி, மட்டக்களப்பு)

மாவிட்டபுரம், சாந்தைச் சந்தியில் காங்கேசன்துறை முகாம் சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட மோதலின் போது நிகழ்ந்த எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய

முஸ்தபா (இரத்தினம் சந்திரசேகரி-புத்தூர் கிழக்கு)

சாவகச்சேரியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட உழவு இயந்திர விபத்தில் எமைப்பிரிந்த

கண்ணன் / செல்வம் (நாராயணசாமி செல்வக்கிருஷ்ணன் - சுழிபுரம் மத்தி)

இணுவிலில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் எமைப்பிரிந்த

அமலன் (செல்வராசா சேதீஸ்வரன் - சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/3473)

## சிந்தனைக்கு

அநீதியைத் தாங்குபவனைவிட,
அநீதி இழைப்பவனே
என்றும் அதிக அவதியுறுவான்.
— பிளேட்டோ

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 14-11-1991
தொலைபேசி
ஆசிரியர்பீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2208
த. பெ. எண் 05

# ராணுவ செலவீடும் அபிவிருத்தியும்

தமிழ் பிரதேசத்தின் மீதான பொருளாதாரத் தடையை நீக்கக் கோரியும், தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒழுங்கு செய்யக் கோரியும், நிவாரணம் வழங்கக் கோரியும் கடற் தொழிலாளர்களும், வகுப்புத் தொழிலாளர்களும் யாழ் செயலகத்தில் பெரும் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இதேவேளை, சிறிலங்கா பாராளுமன்றத்தில் வரவுசெலவுத் திட்டத்தை சமர்ப்பித்த சிறிலங்கா நிதியமைச்சரான டி. பி விஜயதுங்கா ஆயுதப் படையினரின் அடுத்த வருடச் செலவினத்திற்கென 1530 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார். இந்த வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துப் பேசிய நிதியமைச்சர் வடக்கு - கிழக்குப் பகுதியில் நடைபெறும் உள்நாட்டுப் போர் நிறுத்தப்பட்டாலே தெற்காசிய பிராந்தியத்தில் பொருளாதார சுபீட்சம் மிக்க நாடாக சிறிலங்கா மாற முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டின் வளங்களைப் பாதுகாப்புச் செலவினம் அரித்துச் செல்கின்றது, 1992ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவினத்தில் கை வைக்க விரும்பினோம், ஆனால், இராணுவம் வடக்கு-கிழக்கில் யுத்த நடவடிக்கைகளை ஆரம்பித்து விட்டதனால் அது முடியாமல் போய்விட்டது என வரவு - செலவுத் திட்ட தயாரிப்புடன் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாட்டின் ஒரு பகுதியில் மக்கள் - தமது தொழில் செய்யும் உரிமையை அங்கீகரி, பொருளாதாரத் தடையை நீக்கு எனப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கையில், பாதுகாப்பு செலவினம் என்ற ரீதியில் ஒரு பிரதேசத்தை, ஒரு பகுதி மக்களை அடக்கி ஒடுக்கவும், அழித்தொழிக்கவும் அவர்களின் பொருளாதாரத்தைச் சிதைக்கவும் நிதியினை ஒதுக்கும் நிதி அமைச்சர் ஒருவர் பொருளாதாரச் சுபீட்சத்தைப் பற்றிப் பேசுவது / செய்வது வினோதமாகவுள்ளது.

பொருளாதார சுபீட்சமும், இராணுவச் செலவீடுகளும் ஒன்றிற்கொன்று விரோதமானவை. இராணுவச் செலவீட்டின் அதிகரிப்பானது தனியாக அபிவிருத்திக்கான நிதியை குறைத்து வருவதோடு நின்றுவிடுவதில்லை ஒரு பகுதியில் பெரும் பொருளாதார சீரழிவுகளையும், உற்பத்தி அழிவுகளையும் ஏற்படச் செய்கின்றது. இதனால் பொருளாதார வளர்ச்சி / சுபீட்சம் பெரிதும் பாதிப்படைகின்றது.

இந்த நிலையில் நிதி அமைச்சரின் வரவு செலவுத் திட்ட உரையும் ஒதுக்கீடும் ஒன்றிற்கொன்று முரண்பட்டவையாக உள்ளன. பொருளாதார சுபீட்சம் வேண்டின் நாட்டில் ஸ்திரமான ஆட்சி வேண்டும். அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். மக்கள் யாவரும் அபிவிருத்தியில் பங்குபற்ற வேண்டும். இராணுவச் செலவீடுகள் குறைக்கப்பட வேண்டும். ஆனால், நிதி ஒதுக்கீடு அவற்றை உணர்த்துவதாக இல்லை.

ஒரு பகுதியில் யுத்தமொன்றை நடத்திக் கொண்டு, உற்பத்தி நடவடிக்கைகளில் அவர்களைப் புறம் தள்ளி விட்டு அபிவிருத்தி/ சுபீட்சம் என்பனவற்றை ஏற்படுத்திவிடமுடியாது. மேலும் யுத்தத்தை எவரும் அரசாங்கம் மீது திணிக்கவில்லை. சிங்கள அரசாங்கமே யுத்தத்தை தமிழர் மீது திணித்துள்ளது. ஆகையினால் யுத்தத்தை நிறுத்துவதென்பது அரசின் கையிலேயே தங்கியுள்ளது. அதேவேளை யுத்தத்தினால் தமிழ் தேசிய பிரச்சினைக்கு தீர்வு ஒன்றைக் கண்டு விட முடியாது எனவும் சிறிலங்கா அரசாங்கம் புரிந்து கொண்டுள்ளது. ஆனால், பேரினவாத சிந்தனையாலும் அரசியல் அதிகாரப் போட்டியினாலும் இராணுவத் தீர்வை நாடிநிற்கிறது. இதற்கு தமிழர் தரப்பில் எவருமே பொறுப்பில்லை. ஆகையால் சிறிலங்காவின் சுபீட்சமும் அபிவிருத்தியும் ஏற்படவேண்டும் எனில் போரை நிறுத்த வேண்டியது அரசாங்கமே ஒழிய வேறு எவருமில்லை.

## தென்னாசிய பிராந்தியம்

# அணுவாயுதமற்ற பிரதேசம் இந்தியா எதிர்ப்பு

(ஜெனீவா)

ஐ.நா. அரசியல் பாதுகாப்பு குழுவில் தென்னாசியப் பிராந்தியத்தை அணு ஆயுதமற்ற பிரதேசமாக பிரகடனப்படுத்தக் கோரும் தீர்மானத்தை இந்தியா எதிர்த்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை கூடிய கூட்டத்தில் பங்களாதேசின் உதவியுடன் பாகிஸ்தான் இப் பிரேரணையைக் கொண்டு வந்தது பிரேரணைக்கு ஆதரவாக 104 நாடுகளும் எதிராக மூன்று நாடுகளும் வாக்களித்தன.

பிரேரணையின் மீதான இந்தியாவின் கொள்கை அடிப்படையான எதிர்ப்பை ஐ.நாவுக்கான இந்தியத் தூதர் பிரகாஷ் ஷா தெரிவித்தார். இப் பிரேரணை கொண்டுவரப்பட முன்னர், பிராந்திய நாடுகளிடையே ஆலோசனை செய்யப்பட்டிருக்க வேண்டும் எனவும் இது இந்த யோசனையின் வெற்றிக்கு இன்றியமையாதது எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவின் இந்நிலைப்பாட்டை சோவியத் ரஷ்யா ஆதரித்தபோதும் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தது.

## பாக். இந்திய விவகாரம்

# ஈரானின் அறிவிப்பிற்கு நவாப் ஷெரீப் வரவேற்பு

(டில்லி)

காஷ்மீர் பிரச்சினையைத் தீர்ப்பது மற்றும் பாகிஸ்தான் இந்திய உறவுகளைச் சீராக்குவது என்பவற்றில் உதவத் தயாராக இருப்பதாக ஈரான் வெளியுறவு அமைச்சர் அலி அக்பர் வெலயாதி கூறியிருப்பதை பாகிஸ்தான் பிரதமர் நவாப் ஷெரீப் வரவேற்றுள்ளார்.

இதேவேளை இந்திய வெளியுறவு அமைச்சர் மாதவ் சிங் சோலங்கி ஈரானுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளமையும், கடந்த திங்கள் இரவு இந்திய ஈரானிய வெளியுறவு அமைச்சர்களுக்கிடையே இருதரப்பு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்

# கர்வம் பிடித்த 'வைஸ்ராய்' டிக்சிற்

— அனுரா

(கொழும்பு)

இந்தியாவின் இன்றைய வெளியுறவுச் செயலாளர் டி. என். டிக்ஸிற்றை 'கர்வம் மிக்க வைஸ்ராய்' (ராஜப்பிரதிநிதி) என்று 1987 இல் அனுரா பண்டாரநாயக்கா வர்ணித்துள்ளார்.

டி. என். டிக்ஸிற் கொழும்பில் இந்திய உயர் ஸ்தானிகராக இருந்த போது உள்நாட்டுப் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்த கருத்துப்பற்றி பாராளுமன்றத்தில் கேள்வி கேட்ட போதே அனுரா இப்படித் தெரிவித்தார்.

அவசர காலச் சட்டத்தை நீடிப்பதற்கான பிரேரணையில் அனுரா பேசிய போது, டிக்ஸிற் குழம்பும் மனப்பான்மை கொண்ட கர்வம் பிடித்த வைஸ்ராய் ஆகி விட்டாரென்றும், டிக்ஸிற்றைப் போன்ற நிலையிலுள்ள ராஜதந்திரி ஒருவர் முட்டாள் தனமான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார் என்பதை நினைக்கக் கவலையாக உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

தமிழரைக் காப்பாற்ற ஒரு ஆத்மீகக் கடமைப்பாடு இந்தியாவுக்கு உள்ளது என்று டிக்ஸிற் சொன்னதைக் குறிப்பிட்டு, எவ்வாறு ஒரு நாடு இன்னும் ஒரு நாட்டில் ஆத்மீகக் கடமையை நிறைவேற்ற முடியும் என்றும், அனுரா பண்டாரநாயக்கா கேட்டார். எமது மக்களின் ஒரு பிரிவினரைப் பாதுகாப்பதற்கு இவருக்கு என்ன உரிமையுண்டு என்றும் பண்டாரநாயக்கா கேட்டார்.

உறவை

என்றும், அவை பின்வரும் விடயங்களில் அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியர்கள் இலங்கைக்கு கட்டுப்பாடின்றி வந்து போவதற்கான தாராள கொள்கை ஒன்றை இந்தியா அறிமுகப்படுத்த வேண்டும்;

விமானம் மூலம் இளைஞர்கள் இரு நாடுகளுக்கும் இடையில் பயணம் செய்வதற்கு வசதியாக சலுகை விமானக் கட்டணம் வசதி செய்து கொடுப்பது;

கொழும்பிற்கும் புதுடில்லிக்கும், பம்பாய் கல்கத்தாவிற்கும் இடையே நேரடி விமான சேவைகளை நடத்துவது;

இராமேஸ்வரத்திற்கும் தலைமன்னாருக்கும் இடையே மீண்டும் கப்பல் சேவையை ஆரம்பிப்பது போன்ற விடயங்கள் குறித்து தொண்டமான் பேசுவாரென எதிர்பார்க்கப்படுகின்றது.

மாவீரர்கள்

ளை, எத்தனை கஷ்டங்களை எல்லாம் தாங்கிக் கொண்டார்கள் என்பது எல்லாம் வரலாறு. இவ்வளவையும் எதிர்கொண்டு அவர்கள் பயணம் தொடரக் காரணமாக இருந்தமை மன உறுதியும், நம்பிக்கையுமே ஆகும். இவர்களைப்பற்றிய மனப்பதிவுகள் அதிகரிக்க மக்கள் இதயங்களும் உறுதி பெறத் தொடங்கின.

போராட்டத்தின் பலமும், வெற்றியும் மக்களின் கரங்களிலேயே தங்கியுள்ளன. போராட்டத்தை கட்டிக்காத்து வளர்த்தெடுக்க வேண்டியவர்கள் மக்களே. மக்களது பிள்ளைகளே இன்று போராளியாக, மாவீரர்களாக உள்ளனர் என்பதை மக்கள் மறந்துபோய் விடக்கூடாது. அனைவரும் சுதந்திரமான வாழ்விற்கே இந்தப் போராட்டம் என்பதை அவர்கள் அடிக்கடி நினைவிலிருத்த வேண்டும்.

சுதந்திரத்திற்காகப் போராடிய - போராடும் ஒவ்வொரு நாட்டிலும் உயிர், உடைமை இழப்புக்கள், பசி, பட்டினி என்பன சாதாரணமானவையே. பேரினவாத எதிரியின் இவ்வாறான சூழ்ச்சிகளுக்கு நாம் வளைந்து கொடுக்காது அவனுக்கெதிராக நமது போராட்டத்தை மென்மேலும் முனைப்புப்படுத்தவே முயல வேண்டும். மாவீரர்களின் நினைவுகளை பசுமையாக இருத்துவோம். அவர்கள் பணியைத் தொடர உறுதி எடுப்போம்.

தென்மராட்சி

வுகள் அமைக்கப்பட்டுள்ளன. இத்தாவில் சந்தியில் கரும்புலிகள் கப்பலைத் தாக்கிச் சேதம்செய்யும் கடைசி வளைவாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. பளையில் பிரமாண்டமான பந்தல்வேலை ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. பளை தெற்கு பனம்பொருள் சங்க முன்வீதியில் கோட்டையை எமது போராளிகள் கைப்பற்றும் காட்சியை வெளிப்படுத்தும் வளைவு காணப்படுகிறது.

கொடிகாமம் சந்தியில் நான்கு வீதியையும் உள்ளடக்கிய நாற்கோணமான, பிரமாண்டமான பந்தல்ஒன்று போடப்பட்டு வருகிறது, இதில் வாலிபர்கள், வயோதிபர்கள் அனைவரும் கலந்து மும்முரமாக ஈடுபட்டுவருவதனை காணக்கூடியதாக உள்ளது.

யாழ். நகரில் தட்டாதெருவில் அலங்காரப்பந்தல் ஒன்று போடப்பட்டுள்ளது.

## விபுலானந்தர் நூற்றாண்டு விழா

யாழ். தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் விபுலானந்தர் அடிகளார் நூற்றாண்டு விழா நடைபெறவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை (15 11 91) பிற்பகல் 12.30 மணிக்கு ஆசிரியை இ. பாலச்சந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக ஆசிரிய பயிற்சிக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. எஸ் விஸ்வலிங்கம் அவர்கள் கலந்து கொள்கின்றார்.

## கலந்துரையாடல்

(நமது நிருபர்)

கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், மற்றும் இரண்டாம்படி கூட்டுறவுச் சங்கத் தலைவர்களுக்கான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை பத்து மணிக்கு யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட கூட்டுறவு சபைத் தலைவர் இலமாராசா தலைமையில் நடைபெறவிருக்கும் இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளும்படி சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அழைப்பு விடப்பட்டுள்ளது.

பரீட்சை

கையளித்தனர்.

யாழ். நல்லூர் பின் வீதியிலிருந்து பி. ப. 2.15 மணியளவில் ஆரம்பமான இந்த ஊர்வலப் பேரணியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் நூற்றுக்கணக்கில் கலந்துகொண்டனர்.

ஆண் மாணவர்களுடன் மாணவிகளும் கலந்துகொண்டு சைக்கிள்களில் ஊர்வலமாகச் சென்று முதலில் யாழ். கல்வித் திணைக்களத்தில் யாழ். கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. வேலாயுதம் அவர்களிடம் தமது மகஜரைக் கையளித்தனர். அம் மகஜரைப் பெற்றுக்கொண்ட அவரும் ஏனைய அதிகாரிகளும் தாம் இப் பரீட்சையை உடன் நடத்த ஆவன செய்வதாக மாணவர்களிடம் வாக்குறுதியளித்தனர்.

பின்னர் சைக்கிள் பேரணி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் காரியாலயம் சென்று இம் மகஜரின் பிரதியைக் கையளித்தது.

யாழ் செயலகத்திற்கு ஊர்வலமாகச் சென்ற மாணவர்கள் மேலதிக அரச அதிபர் திரு. க. சண்முகநாதனிடமும் மகஜரைக் கையளித்தனர். (தி)

ஒத்திவைப்பிற்த

பி. விக்கு வழங்கிய பேட்டியில் கையும் தெரிவித்தார்.

சார்க் உச்சி மாநாடு பின்போடப்பட்டதற்கு இந்தியாவின் நிலை காரணமாக இருந்தது என்ற சிறிலங்காவின் குற்றச்சாட்டையும் ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்த ஆண்டு முடிவிற்குள் உச்சி மாநாடு நடத்தப்படும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

# சுதந்திரக்கட்சி செயற்குழுவில் சிலரை இணைக்க சிறிமா முயற்சி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழுவுக்கு மேலும் சிலரை சிறிமாவோ பண்டாரநாயக்கா நியமிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. இதன் மூலம் கட்சியில் உள்ள நெருக்கடி தணியலாம் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

ஜூலை மாதம் 1 ஆந்திகதி மத்திய குழுவிற்கு ஐந்து உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். இப்போதும் சில வெற்றிடங்கள் மத்திய குழுவில் நிரப்பப்படாமல் உள்ளன. ஜூலையில் மத்தியகுழு நியமனங்களை சிறிமாவோ மேற்கொண்ட சமயம் மகன் அனுரா பண்டாரநாயக்கா வெளிநாட்டில் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிப் பொதுச் செயலாளரை ஏகமனதாகத் தெரிவு செய்யாதபட்சத்தில் கட்சியில் உள்ள முரண்பாடுகள் வெளியில் ஐ.தே. கட்சியின் கையை ஓங்கச் செய்யும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## வேலைக்கு திரும்பாவிடில் புதியவரை நியமிப்போம்

### வைத்திய அதிகாரிகளுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள உதவி வைத்திய அதிகாரிகள் இம் மாதம் இருபத்தெட்டாம் திகதிக்கு முன்பாக வேலைக்கு திரும்பாது விட்டால் யாழ்ப்பாணம், காலி, மருத்துவ கல்லூரிகளிலிருந்து வெளியேறும் நூறு மருத்துவ மாணவர்கள் சம்பந்தப்பட்ட இடங்களில் நியமிக்கப்படுவார்கள் என்று சுகாதார அமைச்சர் கூறியுள்ளார். நேற்று பாராளுமன்றக் கட்டடத்தொகுதியில் நடைபெற்ற செய்தியாளர்மகாநாட்டில் மேலும் பேசிய அவர் இந்த மாதம் ஆறாம் திகதி முதல் நடைபெறும் வேலை நிறுத்தத்தில் பங்கு கொண்டுள்ள உதவி வைத்தியஅதிகாரிகளின் ஒன்பது கோரிக்கைகளில் ஏழு கோரிக்கைகளை நிறைவேற்ற அரசாங்கம் இணங்கியிருப்பதாகவும் தெரிவித்தார்.

## சைக்கிள் வியாபாரிகள் வருகை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கொம்படிபாதையில் யாழ்ப்பாணத்தை நோக்கி பொருள்கள் ஏற்றிவரும் சைக்கிள்வியாபாரிகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகிறது.

சமீப நாட்களாக யாழ். குடாநாட்டிற்கு வந்து செல்லும் சைக்கிள் வியாபாரிகளின் நடமாட்டம் குறைந்திருந்தமை தெரிந்ததே.

தற்போது அடைமழை பெய்து வருகின்ற போதிலும் சைக்கிள் வியாபாரிகளின் நடமாட்டம் கொம்படிப்பாதைப் பகுதியில்நெருக்கமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியாவிலிருந்து கொண்டுவரப்படும் பொருள்கள் படகுகள் மூலம் இவ்வழியால் ஏற்றி இறக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (தி)

## லங்காதீப செய்தி உண்மைக்குப் புறம்பானது

### பிரித்தானிய தூதரகம் அறிவிப்பு

கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயத்தில் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு தூதரகத்தின் பொறுப்புகள் பல டில்லியிலுள்ள தூதுவரகத்திற்கு மாற்றப்பட்டு வருவதாக லங்காதீப வெளியிட்ட செய்தியில் எவ்வித உண்மையுமில்லைஎன்றும் பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயம் கூறியுள்ளது.

இது சம்பந்தமாக இந்த அலுவலகம் விடுத்த அறிக்கையில் மேலும் இந்தச் செய்தி சம்பந்தமாக உண்மை நிலையைப் பரிசீலிக்க பத்திரிகை தவறிவிட்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## ஒன்று கூடல்

வலிகாமம் பகுதியில் உள்ள மாணவர் இயக்கத்தைச் சேர்ந்த அனைத்துக் கொத்தணிகளுக்குமான கிராமியத் தொடர்பாளர்கள் மற்றும் மாணவ இயக்க உறுப்பினர்கள் அனைவருக்குமான ஒன்றுகூடலொன்று இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் இன்று பிற்பகல் இடம் பெறவுள்ளதென வலிகாமம் மாணவர் இயக்கப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

ஹேரத்தின்

கொள்ளவேண்டும் என்பது வசதியான ஒரு ஒழுங்கு முறையாகும். பூட்டான மன்னருக்காக அவருடைய பிரதிநிதியை ஏற்றுக் கொள்வது சார்க் அமைப்பில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றார். மேலும், சார்க் தலைவர்கள் ஏகமனதாக ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று 1985ஆம் ஆண்டு டக்காப் பிரகடனம் தெரிவிக்கிறது. இந்த முடிவு பூட்டான் மன்னரையும் கட்டுப்படுத்துகிறது.

அத்துடன் காலத்துக்குக் காலம் சந்தித்துத் தீர்மானம் எடுப்பதன் மூலம் அங்கத்துவ நாடுகளின் நம்பிக்கையைப் பெற வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

சார்க் உச்சி மாநாட்டை வைப்பதற்கான புதிய திகதி அறிவிக்கப்பட்டதும் மாநாட்டில் இந்தியா பங்குபற்றும் என்றும் அவர் கூறினார்.

156 நிலையங்களில்

91 ஆம் ஆண்டுக்கும் வெவ்வேறு வினாத்தாள்களைக் கொண்டதாக இருக்கும்.

91 ஆம் ஆண்டுப் பரீட்சையில் இப் பாடம் இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாக மொத்தம் 5 மணித்தியாலங்களுக்கு நடைபெறும்.

இதேவேளை 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையும் ஆசிரிய கலாசாலை இறுதி ஆண்டுப் பரீட்சையும் டிசம்பர் முதல் வாரத்தில் நடைபெறும். எழுதுநர் தரம் 2 உயர்த்துவதற்கான பரீட்சை இம்மாதம் 23 ஆம் திகதி இடம்பெறும்.

கப்பலில்

யாழ். வர்த்தகர் ஒருவருக்கு அனுப்பப்பட்டதுஎன்றுநேற்று கொழும்பிலிருந்து அறிவிக்கப்பட்டது.

இருப்பினும் சவர்க்காரம் கொண்டு வந்த வர்த்தகர்கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அவற்றை நியாயமாக விநியோகிக்க சம்மதம் தெரிவித்ததைத் தொடர்ந்து சவர்க்காரம் கூட்டுறவுச் சங்கங்களூடாக விநியோகிக்கப்படவுள்ளது.

இதன் பிரகாரம்முன்னதாக அறிவிக்கப்பட்ட சவர்க்கார விலைப்பட்டியலில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது மாற்றம் செய்யப்பட்ட விலைப்பட்டி வருமாறு:

ஒன்று அல்லது இரண்டு அங்கத்தவர் கொண்ட குடும்பத்திற்கு 275கிராம் சலவைத்தூள் ஒரு பக்கற் 33 ரூபாவிற்கும், மூன்று அங்கத்தவர் கொண்ட குடும்பத்திற்கு 130 கிராம் சவர்க்காரம் ஒன்றின் விலை 13 ரூபாவாகவும், 50 கிராம் சலவைத்தூள் ரூ 6 50 என்ற விலைக்கும், நான்கு அங்கத்தவர் கொண்ட குடும்பத்திற்கு 275கிராம் சலவைத்தூள் ஒரு பக்கற் 33 ரூபாவிற்கும், 50கிராம் சலவைத் தூள் ரூ6 50என்றவிலைக்கும் ஐந்து அங்கத்தவர் கொண்ட குடும்பத்திற்கு 130 கிராம் சவர்க்காரம் ஒன்றின் விலை 13ரூபாவிற்கும், 550 கிராம் சலவைத்தூள் 67ரூபாவிற்கும் விநியோகிக்கப்படவிருக்கின்றது. இதற்கான பணிப்புரையை யாழ். செயலகம் சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் விடுத்திருக்கின்றது. (க)

அரச அதிபர்

நேற்று விமானமூலம் கொழும்பு சென்றுள்ளார்.

பருத்தித்துறையில் இருந்து காங்கேசன்துறை வரை கடல் வழியாகவும், அங்கிருந்து பலாலி வரை தரை வழியாகவும் சென்ற அங்கிருந்து விமானம் ஒன்றில் கொழும்பிற்குச் சென்றுள்ளார்.

யாழ். பல்கலையில்

பரீட்சிக்கப்பட்டார்களாம் ஆனால்நேர்முகப்பரீட்சைமூலம் பதவிகளைநிரப்பக் கூடிய சூழ்நிலையில் பல்கலைக்கழகம் இல்லை என நாசுக்காகத் தெரிவிக்கப்பட்டதாம். அதேவேளை கலைப்பீடத்தில் பல பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வெற்றிடங்கள் நிரப்ப முடியாத நிலை இருக்குமென்றால் தம்மை ஏன் நேர்முகத் தேர்விற்கு அழைக்க வேண்டும் என்றும் மனித உழைப்பை மிச்சப்படுத்தும் நோக்கம் இல்லாமல் பல்கலைக்கழகம் எமது நேரத்தை ஏன் வீணடித்தது என்றும் விண்ணப்பதாரிகள் தரப்பில் பேசப்பட்டது.

அதேவேளை பதவி வெற்றிடம் நிரப்பப்படாமைக்குமேற் கூறப்பட்ட காரணம் ஏற்புடையதல்ல என்றும், சிலர் இப்பதவிகளுக்கு நியமனம் பெறக்கூடாது என பெரும்பக்கனில் உள்ளவர்களில்சிலர் விரும்புவதினாலேயே நியமனங்கள் ரத்துச் செய்யப்பட்டதாவும் விசயமறிந்த பல்கலைக்கழக வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்பட்டது.

இதேவேளை தமிழ் துறைக்கு 70 வயதுக்கும் சற்றுஅதிகமான இளைப்பாறிய தலைமை ஆசிரியர் ஒருவர் விரிவுரையாளர் பதவிக்கான நேர்முகப் பரீட்சைக்கு நேற்று அழைக்கப்பட்டுள்ளார். அவர் விண்ணப்பத்தில் வழங்கியிருந்தசுய விபரங்களைப்பார்வையிடாது வயோதிபரை பயன்பொருத்தமில்லாமல் நேர்முகத் தேர்வுக்கு அழைத்த செயல் பல்கலைக் கழகம் அலுவலகப் பணிகளில் காட்டும் அக்கறையை காட்டுவதாக மாணவர்கள் பேசிக் கொண்டார்கள்.

பத்திரிகையாளர்

பாட்டக்காரர்கள் உதேச பத்திரிகை ஆணைக்குழு மசோதாவைக் கண்டனம் செய்தனர்.

## புலிகள் ஆதரவாளர் எட்டுப்பேர் கைது

(சென்னை)

வேதாரணியத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்பட்ட எட்டுப்பேரை கைது செய்ததாக தமிழக காவல்துறை அறிவித்துள்ளது.

இவர்களைப் பயங்கரவாத, பிரிவினைவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்ததாக காவல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

## திருச்சியில் இல. தமிழர் சயனைட் அருந்தி மரணம்

(சென்னை)

திருச்சிராப்பள்ளியில் தமிழகப் பொலிசார் நடத்திய சோதனையொன்றின்போது இலங்கைத் தமிழர் ஒருவர் சயனைட் அருந்தி மரணமடைந்ததாகத் தெரியவருகின்றது. சென்னையிலுள்ள உத்தியோக பூர்வ வட்டாரங்களை மேற்கோள்காட்டி வெளியிடப்பட்டிருக்கும் செய்திகளிலிருந்து திருச்சிராப்பள்ளி நகருக்கு அருகே ஒரு வீட்டில் மறைந்திருந்த சிலரைப் பிடிப்பதற்காக பொலிசார் திடீர் சோதனை நடத்தியதாகவும், அப்போது குண்டு சம்பன் என்பவர் சயனைட் அருந்தி மரணமடைந்ததாகவும் அவருடன் இருந்த சுதி எனப்படும் வாசுகியும் வீட்டுச் சொந்தக்காரரான ஆனந்தராஜ்வும் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகின்றது.

இது தொடர்பாக ராஜீவ்காந்தி கொலை சம்பந்தமான விசாரணைகளை மேற்கொண்டிருக்கும் விசேட புலனாய்வுப் பிரிவினர் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விசாரணைக்கு நிறுத்தவும் அல்லது விடுவிக்கவும்

- ரிபியூக் கோரிக்கை

(லண்டன்)

இலங்கைச் சிறைகளிலும் தடுப்பு முகாம்களிலுமுள்ள அனைத்து அரசியல் கைதிகளும் விசாரணைக்கு நிறுத்தப்பட வேண்டும் அல்லது உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என லண்டனிலுள்ள இலங்கை தமிழ் அரசியல் கைதிகளின் சங்கமான ரிபியூக் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் கோரியுள்ளது.

களுத்துறைச் சிறையில் தமிழ் அரசியல் கைதிகள் விசாரணையின்றி தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருப்பதை கண்டித்துள்ள இச் சங்கம், இது அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாக உள்ளது எனவும் கூறியுள்ளது.

## வெற்றுப் பீப்பாக்கள் அனுப்ப வேண்டாம்

யாழ்ப்பாணம்

கப்பல் மூலம் திரவப் பொருள்களை வட பகுதிக்கு எடுத்து வரும் பீப்பாக்களைத் திருப்பி கொழும்புக்கு அனுப்பி வைக்க வேண்டாம் என்ற கண்டிப்பான வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கின்றது. வெற்றுப் பீப்பாக்களில் வெடிகுண்டுகள் கொழும்புக்கு வந்து சேர்ந்து விடலாம் என்ற பீதியே மேற்படி முடிவுக்கு முக்கிய காரணம் என்று கூறப்படுகின்றது. (க)

## 15 முதல் 27 வரை மாவீரர் கொடிவாரம்

மாவீரர் நாள்-1991



விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம்

தமிழீழ மாவீரர் வாரம் கொண்டாடப்படுவதையொட்டி நாளை தொடக்கம் வரும் இருபத்தேழாம் திகதி வரையான நாள்களைக் கொடி வாரமாக விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு பிரகடனம் செய்துள்ளது. இதனையொட்டி கல்வி நிலையங்களிலும், பொது இடங்களிலும் வழங்கப்பட இருக்கும் கொடிகளுக்கு அனைவரது ஆதரவையும் மாணவர் இயக்கம் அன்புரிமையுடன் நாடி நிற்கிறது என அறிவிக்கப்பட்டுள்ளது.

சிவப்பு வர்ணத்திலான இக்கொடியில் பத்தகத்தின் மீது தமிழீழமும், மாவீரர்களின் கல்லறையும் வரையப்பட்டு இரண்டு கைகள் அவற்றை ஏந்திக் காப்பது போல வரையப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு கார்த்திகைமாதம் 14ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது